விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 01 புதன்கிழமை (18.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 294

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# புலிகளின் குரல் பணிமனை மீது கிபீர் விமானக் குண்டுத் தாக்குதல்

## ஒலிபரப்புக் கோபுரம் சாய்ந்தது

(கிளிநொச்சி)

புலிகளின் குரல் ஒலிபரப்பு நிலையம் கிபீர்விமானத் தாக்குதலில் சேதமடைந்தது. நேற்றுக் காலை 9.45 மணியளவில்-புலிகளின் குரல்,தமிழீழ வானொலி ஒலிபரப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கொக்காவிலில் உள்ள அதன் அலுவலகம் மீது இரு கிபீர் விமானங்கள் 25 இற்கும் மேற்பட்ட ரொக்கட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன.

இத் தாக்குதலில் புலிகளின் குரல் ஒலிபரப்பு நிலையம்,தமிழீழ வானொலி, சிங்கள சேவை மற்றும் ஒலிபரப்பும் கோபுரம், இரண்டு கலையரங்கங்கள் சேதமடைந்தன.

அத்துடன் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. புலிகளின் குரலின் ஒலிபரப்புக் கோபுரம் முற்றாகச் சேதமடைந்தது.

ஒலிபரப்பு நிலையம், அதிலிருந்த உயர் வலு ஒலிபரப்பு சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் உட்பட 3 கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் அழிக்கப்பட்டதாக புலிகளின் குரல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதல் இடம் பெற்றபோது ஒலிபரப்பில் ஈடுபட்டிருந்தோர் உடனடியாக தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்போது சுரேந்தர் (வயது 23) ;கரிதாஸ் ஆகிய இருவர் காயமடைந்தனர். இயங்க முடியாத அளவிற்கு அனைத்து உபகரணங்களும் (04 ஆம் பக்கம் பார்க்க)



# சமாதானப் பேச்சுக்களை நடாத்த நோர்வேயும் ஜப்பானும் தீவிர முயற்சி

## இன்று அகாசியும் நாளை பெளயரும் கிளிநொச்சி விஜயம்



(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் எதிர்வரும் 28 ,29 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் நேரடிப்பேச்சுக்களை திட்டமிட்டவாறு நடாத்த நோர்வேயும் யப்பானும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

இந் நிலையில் யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி இன்றும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பெளயர் நாளையும் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளனர்.

விமானத் தாக்குதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ள வேளையில் திட்டமிட்ட பேச்சுக்கள் நின்றுவிடாத வகையில் இரு நாடுகளும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(04 ஆம் பக்கம் பார்க்க)



## ஹபரணை தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம்

(கொழும்பு)

ஹபரணையில் கடற்படையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. அமெரிக்கா இராஜங்க திணைக்களத்தின் பேச்சாளர் சென் மெக் கொர்மக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலை நாம் கண்டனம் செய்கிறோம்.ஹபரணை அருகே நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் கடற்படையினர் மற்றும் பொதுமக்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை நவம்பர் 4இல் நடக்கும்!

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் அசாதாரண நிலைகளினால் இடைநிறுத்தப்பட்ட 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பரீட்சையை நடாத்துமாறு கல்வித் திணைக்களம் விடுத்த பணிப்புரைக்கமைய அப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

பரீட்சையை நடத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் பின்வீதியில் வைத்து குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

நல்லூர் கந்தசுவாமி ஆலய பின்வீதியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.இச் சம்பவம் நேற்றுக் காலை 9.40 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சாங்கிலியன் வீதி நல்லூரைச் சேர்ந்த கனகலிங்கம் பாஸ்கரன் (வயது 34) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தனது காருடன் அவ்விடத்தில் நின்றபோது இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## "புலிகளின் குரல்" மீதான தாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரல் ஒலிபரப்பு நிலையம் மீது கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தி அழித்தமைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை பார்வையிட் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரேத குளிரூட்டி செயலிழந்தது

(துன்னாலை)

மந்திகை வைத்தியசாலையில் இந்திய அரசினால் அண்மையில் வழங்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான பிரேத குளிரூட்டி செயலிழந்து உள்ளது.

இதனால் வடமராட்சி பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் சடலங்களை பழுதடையாது வைத்திருக்க முடியவில்லை எனவும் அச்சடலங்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட வேண்டியுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-10)

# சிறுவர்களுக்கான பால்மா இன்று முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஊடாக யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆரம்ப சிகிச்சை நிலையங்களில் இன்று முதல் பால்மா விநியோகிக்கப்படவுள்ளது. யாழ். அரச அதிபர் மூலம் யாழ்.சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் ஊடாக கொடுக்கப்பட்ட இப்பால்மா பைக்கற்றுக்களே வழங்கப்படவுள்ளன.

அங்கர் 1(+) ரூபா 172ற்கும்,நெஸ்பிறே 1(+) ரூபா 199 ரூபாவிற்கும், 1-3 வரையான வயதுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது. இப்பால்மா பின்வரும் இடங்களில் வழங்கப்படவுள்ளன.

நல்லூர்,பாசையூர்,யூபிலி, ஆகிய இடங்களில் இன்றும், வண்ணார்பண்ணை , சுவாமியார் வீதி ஆகிய இடங்களில் நாளையும் பால்மா வழங்கப்படவுள்ளது.

குருநகர்,கந்தர்மடம்,கொட்டடி,நாவலர் வீதி; மற்றும் அரியாலையில் நாளை மறுதினமும் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ச)

# இன்றைய பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்று வரும் 2005ஆம் ஆண்டிற்கான விசேட பரீட்சையில் இன்று நடைபெற விருந்த பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அதிபரும் பிராந்தியப்பணிப்பாளருமான ந.யோகராஜன் அறிவித்துள்ளார்.

அப்பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் நாளை முதல் குறிப்பிட்ட அட்டவணைப்படி பரீட்சைகள் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார். (ச)




இலங்கை மத்திய வங்கி புதிய 2 ஆயிரம் ரூபா நாணயத் தாள்களை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டது. ஏனைய நாணயத்தாள்களை விடவும் விசேட பாதுகாப்பு உபாய முறைகள் பல இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் 2 ஆயிரம் ரூபா நாணயத்தாளையே படத்தில் காண்கிறீர்கள்

# மூவரை காணவில்லை என ம.உ.ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் மூவரைக் காணவில்லையென யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 11ஆம் திகதி உறவினரான நோயாளி ஒருவரை கொழும்பிற்கு அழைத்துச் செல்வதற்காக கப்பலில் செல்வதற்கு சிங்கள மகாவித்தியாலயம் சென்ற போது 7-ம் ஒழுங்கை கொட்டடியைச் சேர்ந்த செல்வரட்ணம் டெலிக்குமார் (வயது - 33) என்பவரை இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மற்றும் கடந்த 12ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியே சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை கடந்த 13 ஆம் திகதி வீட்டிற்குச் சென்ற அல்வாய் வெள்ளப்புற்று என்ற இடத்தைச்சேர்ந்த யோகதாஸ் சுந்தர வடிவேல் (வயது - 24) என்ற இளைஞனும் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ -5)

# சோஆ நிறுவனத்தினால் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நெதர்லாந்தைச் சேர்ந்த அகதிகளுக்கான பராமரிப்பு நிறுவனத்தினால் கடந்த 11.08.2006ன்பின் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு,உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

சந்தனமாதா ஆலய முகாமிலுள்ள 21 குடும்பங்களுக்கும்,நாவாந்துறை பாடசாலை முகாமிலுள்ள 70 குடும்பங்களுக்கும்;கதீனா முஸ்லிம் கல்லூரி முகாமிலுள்ள 79 குடும்பங்களுக்கும், அடைக்கலமாதா ஆலய முகாமிலுள்ள 210 குடும்பங்களுக்கும் உணவல்லாத பொருட்களான பானை, வாளி ,நுளம்புவலை , சவர்க்காரம், அரிக்கன்லாம்பு,தாச்சி ,கத்தி,பாய்,சுடுநீர் போத்தல் என்பன தலா ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியுள்ள வெளிமாவட்ட , நோயாளர்களுக்கு அவர்களின் தேவைகள் அடிப்படையில் உணவும்,உணவல்லாத பொருட்களும் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 11 முகாம்களில் உள்ள 256 குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்களாக தலா ஒரு குடும்பத்திற்கு ஒரு அங்கர், ஒரு கிலோ சீனி; ஒரு கிலோ பயறு , லக்ரோஜன், செறில்க் ஆகியன வழங்கப்பட்டதாக அந்நிறுவனத்தின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாவாந்துறை பாடசாலை, மற்றும் கதீனா முஸ்லிம் கல்லூரியிலுள்ள முகாம்களுக்கு நாளை சீனி,பால்மா என்பன வழங்கப்படவுள்ளன. (ச)

# மீன்பிடியியல் டிப்ளோமாவுக்கு அறுபது மாணவர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2006ஆம்ஆண்டுக்கான மீன்பிடியியல் டிப்ளோமாக் கற்கை நெறிக்காக 60 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களை தங்கள் பதிவுகளை உடனடியாக யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் அனுமதிகள் கிளையில் மேற்கொள்ளுமாறும் கற்கைநெறிகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விபரம் வருமாறு;

நா.அனுஷகுமார், ச.சர்மிளா, த.தயாபரன், பா.சானுஜன், ம.மஞ்சுளா , யோ.சிவதயாளினி , ம.ரேகா, ப.விஜயதீபன், ம.ரஜீதா, பூ.செந்தூரன்,ஆ.பிரசாந்தன், பொ.சாரங்கன், சோ.சஞ்சீவன்,த.அஜந்ததாசன், யோ.அரவிந்தன் , ந.அனந்தனன் , அ.அமிர்தவர்சினி, இ.சாந்திசுதன், ஶ்ரீ.ரஞ்சினிதேவி,கு.சுதாகர்,ஸ்ரனிஸ்லஸ் அனுஸ்மன் டேவிட்பீரீஸ்,து.சுஜாதா, பா.தாரணி, கை.ஜெயநேசன், ம.விஜிதா, செ.தர்சினி, தி.காஜத்ரி , சி.இராஜலக்ஸ்மி , த.ஜெயந்தன், ம.கிருபானந்தன்,

ச.விமலராஜன், ந.நவநீதன், ச.மகிந்தா, த.கஜனா ,பி.கலைவாணி , த.ரதீஸ்வரன், த.சிவாஜினி , க.ஜெயரூபன் , ர.லக்ஸி , கு.மதனராஜ், ஜெ.மேகலதா , கு.நிஷாந்தினி, ம.ஜெமோஸ்லீன், இ.செந்தீபா , சி.கஜேந்திரநாதன் , அ.அருந் தவராஜன், செ.சொரூபன் , ஶ்ரீ.மகிழினி, பா.முகுந்தினி, செ.சங்கீதா , ஸ்.மேரிமொறீனா, த.தயாளன், நா.ரமேஸ், சி.அருள்மேரி , ஜே.மரியாபிரான்ஸ் வதனா, க.ஶ்ரீஸ்கந்தரூபமணி, இ.தீவன், ச.மேரி தமிழினி, ஜே.சர்மிளன். (கு)

# இலங்கை அணியை 4 விக்கெட்டுகளால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது

அப்துல் ரஷாக்கின் துல்லியமான பந்து வீச்சு,அதிரடியான துடுப்பாட்டத்தினால் பாகிஸ்தான் அணி இலங்கை அணியை 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

மினி உலகக் கிண்ண லீக் போட்டியில் நேற்று பாகிஸ்தான்-இலங்கை அணிகள் மோதின. ஜெய்ப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களை பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் சனத்ஜெயசூர்யா 48 ஓட்டங்களையும் மற்றும் குமார் சங்கக்கார 39, தரங்கா 38,மாவன் அத்தப்பத்து 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணிசார்பாக சிறப்பாகப்பந்து வீசிய அப்துல் ரஷாக் 4 விக்கெட்டுக்களையும் கொனகப் மலிக் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 254 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி இறுதியில் ரஷாக்கின் அதிரடியினால் 48.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் இம்ரன் பர்காத் 53 ஓட்டங்களையும் மொகமட் யூசாப் 49 ஓட்டங்களையும் அப்துல் ரஷாக் 29 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக சமிந்தவாஸ் 2 விக்கெட்டுக்களையும் மகரூப்,முரளிதரன் மற்றும் ஜெயசூர்யா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக அப்துல் ரஷாக் தெரிவானார். வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணிக்கு 2 புள்ளிகள் வழங்கப்பட்டது. (ச)

# அரசு-புலிகளை பேச்சுக்குத் திரும்புமாறு ஐ.நா.செயலாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் வன்முறைகளை கைவிட்டு பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் மீண்டும் போர் மூளும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை பதவியில் இருந்து ஓய்வுபெறவிருக்கும் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

கடந்த பல மாதங்களாக இலங்கையில் பல வன்முறைகள் அதிகரித்துள்ளன. நேற்று முன்தினம் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை கண்டித்துள்ள அவர் யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடி யாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாத இறுதியில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் எதிர்வரும் 28 ,29 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் இடம் பெறும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளனர். (ச-9)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 10.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நயினை எஸ்.சோமேஸ்வர பிள்ளை தலைமையில்நடைபெறும் இந்நிகழ்வில் நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். பரிசில்களை திருமதி இந்திராதேவி குணசேகரம் வழங்குவார். (ச)

# ஹென்டர் உரிமையாளர் பொலிஸாரால் கைது

ஹபரணைப் பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படுத்திய கனரக வாகனத்தின் உரிமையாளர் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வாகனத்தின் முதலாவது உரிமையாளர் குருநாகலைச் சேர்ந்த பெண் எனவும் அவர் அதனை வன்னியைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலுக்கு 80 கிலோ கிராம் எடை கொண்ட வெடி பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (ச)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்து நவீன இலக்கியத்தின் கவனிப்பிற்குரிய படைப்பாளி குப்பிழான் ஐ.சண்முகனின் 'உதிரிகளும்....' சிறுகதை தொகுப்பின் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் செ. சேதுராஜா தலைமையில் நடைபெறும் இந் நூலுக்கான மதிப்புரையினை எழுத்தாளர்களான ஐ.ஜபார், ச.இராகவன் ஆகியோர் நிகழ்த்துவர் பதிலுரையினை நூலாசிரியர் வழங்குவார். (கு)

மானிட சமுதாயத்தை இழிவுபடுத்தவும் அடிமைப் படுத்தவுமே பயங்கர மூடக்கொள்கைகள் எல்லாம் உப யோகிக்கப்பட்டிருக்கின்றன.

-இங்கர்சால்

வலம்புரி

## அந்தகோ! இஃது அழிவைத்தரும் முடிவன்றோ!

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது சட்டத்திற்கு முரணானது என உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜே.வி.பியினர் தாக்கல் செய்த மனுவின் அடிப் படையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வடக்கு கிழக்கு 'இணைப்பு' சட்டத்திற்கு முரணானது என வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தீர்ப்புக்கள் விமர்சனத்திற்குரியவையல்ல எனினும் இந்த நாட்டில் சமாதானத்தின் வழியில் யுத்தம் முடிபுக்கு வராது என்னும் உண்மை உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வுகாண்பர் என்ற மக்களின் எதிர்பார்ப்பு யாவும் சின்னாபின்னமாகிப்போயிற்று.

கௌரவர் சபையில் திரௌபதியின் துயிலை துச்சாதனன் பற்றிஇழுத்து களைந்த போது கௌரவர்கள் கைதட்டி உற்சாகம் கொடுத்தது போல ஜே.வி.பியின் மனுவுக்கு முடிபு கிடைத்துள்ளது.

நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் சட்டத்திற்குரியவையாயினும் உலகில் மிகவும் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படும் நீதிபதிகள் யாரெனில்; தற்துணிபில் சட்டங்களைப் புறந்தள்ளி வைத்து விட்டு ,நீதி ,நியாயம் உண்மை ,எதிர்கால விளைவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளே என்பதை நினைவில் கொள்வதற்குரியது.

இலங்கையிலும் இத்தகைய தீர்ப்புக்கள் தேவையாயுள்ளன. மன்னனும் நானே! மக்களும் நானே !... என்ற பாட்டில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் அழிவை தருமே அன்றி அமைதியை -சமாதானத்தை தரமாட்டாது.

தமிழர்களின் பிரச்சினைக்கு முடிபைக் காணுங்கள் என்றால் தமிழர்களையே அழியுங்கள் அதுவும் தீர்வுதான் எனக்கூறுவது ஆட்சியாளர்களுக்கு; நீதியாளர்களுக்கு அழகல்ல.

அதேபோன்று பிரச்சினைகளை மேலும் மேலும் இறுக்கமடையச் செய்யும் முடிபுகளை, சட்டவாக்கத்தை உருவாக்கும் அமைப்புக்கள் மற்றும் நீதி கோரும் மன்றங்கள் ஏற்படுத்தக் கூடாது.

வடக்கு கிழக்கை இணைத்தது சட்டத்திற்கு முரணானது என்றால் இரண்டு மாகாணங்களையும் பிரியுங்கள் என்பதே அதன் பொருளாகும்.

இரண்டு மாகாணங்களையும் பிரியுங்கள் என்று கூறுவது சுலபம். ஆனால், அதன் எதிர் கால விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

வடக்கு கிழக்கைப் பிரித்துவிட்டு தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமா என்பதை அரசியல் அனுபவம் மிக்கவர்கள் அறிந்து கொள்வார்கள்.

எதுவாயினும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக வடக்கு கிழக்கைப் பிரிக்கும் தீர்ப்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையில் எதுவித பயனும் இல்லை என்பது தெளிவாகின்றதல்லவா?

# உணவுத் தட்டுப்பாட்டை விளக்கி அரச சார்பற்ற நிறுவனங்கள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அசாதாரண சூழ்நிலையினையடுத்து யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாட்டை விளக்கி யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் முகமாலைச் சமர் ஆரம்பிக்கப்பட்டு நாகர்கோவில், பூநகரி முதலிய பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கப்பட்ட நிலையில், யாழ்.குடாநாட்டுக்கான ஏ-9 தரைவழிப்பாதை மூடப்பட்டதையடுத்து குடாநாட்டில் ஏற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாடும் அதனால் மக்கள் பட்ட கஷ்டங்களும் சொல்லில் அடங்காதவை.

யாழ்.மாவட்டத்தில் தற்போது வசிக்கும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஆறு இலட்சம் பேர் வசிக்கிறார்கள். குடாநாட்டின் தற்போதைய உணவு நிலை பயங்கரமானதும் சொல்ல முடியாததுமாகும்.

இன்றைய சூழ்நிலையில் குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் கப்பல்கள் மூலம் குடாநாட்டுக்கு கொண்டு வரப்பட்டு ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இவை தவிர மக்களுக்குத் தேவையான வேறு பல அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படவில்லை. அவற்றைப் பகிரங்க சந்தையிலும் வாங்க முடியாத நிலை குடாநாட்டில் உள்ள சிறிதும் பெரியதுமான வர்த்தக நிலையங்கள் அனைத்தும் வெறுமையானதாகவும் விற்பனைக்கு எதுவித பொருட்களும் இல்லாதனவாகவுமே காணப்படுகின்றன.

தற்போது குடாநாட்டில் உள்ள மக்களின் மாதம் ஒன்றிற்கான உணவுத்தேவை வருமாறு;

| | |
|---|---|
| அரிசி | 4500 மெ.தொ. |
| மா | 2500 மெ.தொ. |
| சீனி | 1500 மெ.தொ. |
| பருப்பு | 500 மெ.தொ. |
| இதர பொருட்கள் | 2000 மெ.தொ. |
| மொத்தம் | 11 000 மெ.தொ. |

12.08.2006 - 06.10.2006 வரையான காலப்பகுதியில் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட பொருட்கள்.

| | |
|---|---|
| அரிசி | 3624 மெ.தொ. |
| மா | 900 மெ.தொ. |
| சீனி | 1875 மெ.தொ. |
| பருப்பு | 2800 மெ.தொ. |
| இதர பொருட்கள் | 2800 மெ.தொ. |

இவ் 11 999 மெற்றிக் தொன் பொருட்களும் ஒரு மாத காலத்திற்கே போதுமானதாக சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது குடாநாட்டில் அத்தியாவசிப் பொருட்களின் நியாய விலையும் கறுப்புச் சந்தை விலையும் வருமாறு;

| பொருள் | நியாய விலை | கறுப்புச்சந்தை விலை |
|---|---|---|
| அரிசி | ரூ. 40 | ரூ.120 |
| மா | ரூ. 40 | ரூ.150 |
| சீனி | ரூ. 68 | ரூ.450 |
| தே.எண்ணெய் | ரூ.120 | ரூ.350 |
| பால் பவுடர் | ரூ.160 | ரூ.300 |
| சர்க்கரை | ரூ. 60 | ரூ.350 |
| தேங்காய் | ரூ. 25 | ரூ. 60 |
| செ.மிளகாய் | ரூ.140 | ரூ.450 |
| பெற்றோல் | ரூ.100 | ரூ.400 |
| டீசல் | ரூ. 75 | ரூ.150 |
| ம.எண்ணெய் | ரூ. 55 | ரூ.150 |

நாளாந்த கூலித்தொழிலாளரது வருவாய்நிலை பூச்சியம். அவர்களது வாழ்க்கை நிலையோ பரிதாபகரம். சமீபகாலம் வரை யாழ்ப்பாணம் இத்தகையதொரு நிலையை சந்தித்தது கிடையாது.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்ட 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் , ஒக்டோபர் மாத களநிலை பற்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-133)

# வட. கிழக்கை பிரிப்பதா? இல்லையா? என்பது மக்கள் சிந்தித்து எடுக்க வேண்டிய தீர்மானம்

## ஈ.பி.டி.பி அறிக்கை

இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு பிரதேசம் என்பது தமிழ் பேசும் மக்களின் தாயக பூமி! எமது முன்னோர்களில் தொடங்கி இன்று வரை பாரம்பரியமாக வாழ்ந்து வரும் எமது வரலாற்று வாழ்விடமான வடக்கும் கிழக்கும் பிரிப்பதா? அல்லது இணைந்திருப்பதா? என்பது எமது மக்கள் சுயமாக சிந்தித்து எடுக்க வேண்டிய ஒரு அரசியல் தீர்மானம் என்பதில் மாற்றம் இல்லை! சட்டங்களால் இயற்றப்படும் தீர்மானங்கள் இதற்கு ஒரு போதும் தீர்வாகிவிட முடியாது என ஈ.பி.டி.பி கட்சி தெரிவித்துள்ளது; இது தொடர்பாக அக்கட்சியின் அறிக்கை வருமாறு;

இன மத சமூக பிராந்திய சமத்துவங்களை அடிப்படையாக கொண்ட அரசியல் ஏற்பாட்டை விரும்பும் நாம் பல்வேறுபட்ட மன உணர்வுகளுக்கும் இடமளிக்கும் பலமானதும்; பாதுகாப்பானதுமான ஒரு நிர்வாக அலகு குறித்த எண்ணங்களையே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். வடக்கு கிழக்கு இணைந்த ஒரே நிர்வாக அலகுக்குள் முஸ்லிம் சகோதர மக்களுக்கான அகச்சுயாதிக்கம் என்பதே ஈ.பி.டி.பியின் அரசியல் நிலைப்பாடாகும்!

1985இல் திம்பு பேச்சுவார்த்தை மேசையில் தமிழ் பேசும் மக்களின் பன்மைத்துவ பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்திலும் சில மாறுதல்களோடு எழுத்தப்பட்ட விடயம் தான் வடக்கு கிழக்கில் இணைந்த ஒரே நிர்வாக அலகாகும்! இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூட வடக்கு கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அதிலிருந்து பெறப்படும் மக்களின் தீர்மானங்களின் அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு இணைப்பு என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது!

வடக்கும் கிழக்கெங்கும் தமது சொந்த வாழ்விடங்களில் சுதந்திரமாக மக்கள் வாழ முடியாத இச்சூழலில், இடைவிடாது தொடரும் யுத்தம் என்பது இடப்பெயர்வுகளை தந்து கொண்டிருக்கின்ற இச்சூழலில், தமது சொந்த வாழ்விடங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு யுத்தம் தடையாக இருக்கும் இந்நிலையில் சர்வஜன வாக்கெடுப்பிற்கான சுமுகமான ஒரு சூழலும் தற்போது இல்லை என்பதே உண்மையாகும்!

பரந்துபட்ட மக்களின் வாழ்வுரிமையை தீர்மானிக்கும் இவ்விடயத்தில் மக்களின் கருத்துக்களே பிரதானமாகும். எமது கருத்துக்களும் நிலைப்பாடுகளும் கூட பரந்து பட்ட மக்களின் தீர்மானங்களுக்கு உட்பட்டவைகளேயாகும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# கருணாநிதி தலைமையிலான குழு புதுடில்லி சென்று பேச வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்தல்

(சென்னை)

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக எடுத்துரைக்க தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் புதுடில்லிக்கு அனைத்துக் கட்சிக்குழு செல்ல வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களுக்கு ராமதாஸ் அளித்த நேர்காணல் வருமாறு;

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு அந்நாட்டு அரசை உரத்த குரலில் கண்டிக்க முதல்வர் கருணாநிதி முன்வர வேண்டும். இது தொடர்பில் முதல்வர் தலைமையில் அனைத்து கட்சிக்குழு புதுடில்லி சென்று இப்பிரச்சினையை எடுத்துரைக்க வேண்டும்.

இலங்கையில் நடக்கும் நிகழ்வுகள் உலகத்தமிழர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. சமாதானம் பேசுவதாக ஒரு புறம் சொல்லிக் கொண்டு இன்னொரு புறம்தமிழர்களை அழிக்கும்பணியில் அரசு ஈடுபட்டுள்ளது.

இந்தியா ,ஐரோப்பிய கூட்டமைப்பு,அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆலோசனைகளை மதிக்கவில்லை இப்போது கிராமங்களை குறிவைத்து அப்பாவித் தமிழர்களை அழிக்கும் பணியில் சிங்கள இராணுவம் ஈடுபட்டு வருகிறது.

நடந்து போனவை பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு இந்த பிரச்சினையில் உரத்த குரலில் அரசை கண்டிக்க முதல்வர் கருணாநிதி முன்வர வேண்டும்.

இதற்காக அனைத்து கட்சிக்குழு அவரது தலைமையில் புதுடில்லி செல்ல வேண்டும். அதற்கு இதுவே சரியான தருணமாகும் என்றார் ராமதாஸ்.

(எ-1)

# நீதிமன்ற தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இணைப்பு சட்ட விரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமையைக் கண்டித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று பாராளுமன்றத்தினுள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சபை நடவடிக்கைகள் 45 நிமிடம் மட்டுமே நடைபெற்றது. நேற்றுக் காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடியது இதன்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சபை நடுவே சென்று நீதிமன்றத்தீர்ப்புக்கு எதிராக கோசமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கை பிரிக்கக் கூடாது எனவும் ,அரசாங்கத்தைக் கண்டித்தும் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனால் சபாநாயகர் உரியவாறு தனது ஆசனத்திற்குச் செல்லமுடியவில்லை. பின் வாசல் வழியாகவே சபாநாயகர் தனது இருக்கைக்குச் சென்றார்.

இதேவேளை ஆளுங்கட்சியினரின் வாயிலூடாகவே செங்கோல் கொண்டு செல்லப்பட்டது. இக் கூச்சல் குழப்பத்தினால் சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என தெரிவித்த சபாநாயகர் சபை நடவடிக்கைகளை இன்று வரை ஒத்திவைத்தார். (ச)

## சு.க.வுடனான ஒப்பந்தம் ஒக்.23 இல் கைச்சாத்து

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான ஒப்பந்தத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு ஒப்புதல் தெரிவித்துள்ளது.

மகிந்தவின் அரசாங்கத்தில் இணைவது தொடர்பாக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஐக்கிய தேசியக்கட்சி நடத்தியது.

இந் நிலையில் அண்மையில் மகிந்தவுடன் ரணில் விக்கிரமசிங்கவும் பேச்சுக்களை நடாத்தியிருந்தார். இரு கட்சிகளிடையே எதிர் வரும் ஒக்டோபர் 23 ஆம் நாள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் செயற்குழு நேற்று முன்தினம் கூடி விவாதித்து ஒப்புதல் அளித்தது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 50 வீத அமைச்சு பதவி அளிக்கப்பட வேண்டும் என்று காலி நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார். செயற்குழு உறுப்பினர் ரோசி சேனநாயக்கவும் இதனை வலியுறுத்தியுள்ளார். (ச)

## கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைவு



(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் நகர பிதா உட்பட 21 அங்கத்தவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்துள்ளனர்.

அரசின் செயற்திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்து கொழும்பு நகர பிதா உவைஸ் எம்.இம்தியாஸ் மற்றும் பிரதிநகர பிதா எஸ்.ராஜேந்திரன் உட்பட்ட 21 அங்கத்தவர்களும் சுதந்திரக்கட்சியில் இணைந்துள்ளனர்.

அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து அவர்கள் கட்சி அங்கத்துவத்தினை பெற்றுக்கொண்டுள்ளனர்.

மகிந்த சிந்தனை செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு நகரை ஆசியாவின் சிறந்த நகரமாக மாற்றியமைப்பதற்காக ஜனாதிபதியின் ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனைகளையும் தாம் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்ட குறித்த பிரதிநிதிகள் நாட்டின் எதிர்கால மேம்பாட்டிற்காக எவ்வகையான தியாகங்களையும் மேற்கொள்ளத் தாம் ஆயத்தமாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

பயங்கரவாதத்தை தோல்வியுறச் செய்து சிங்கள ,தமிழ்,முஸ்லிம் ,பறங்கியர் ,மலாயர் உட்பட்ட அனைத்து இனத்தவரும் இந்த நாட்டில் சமாதானம் மற்றும் சகவாழ்வுடன் வாழக் கூடியதான நாடாக மாற்றியமைப்பது தமது ஒரே எதிர்பார்ப்பாகும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# வட.கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்க அரசு முயன்றால் அதற்கு ஆதரவு!

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் இணைப்பை நிரந்தரமாக்க அரசாங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமானால் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாணத்தின் இணைப்பு சட்ட விரோதமானது என உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதனை உறுதிப்படுத்துவதற்கு அரசிற்கு முழு அளவிலான உரிமையுள்ளது. அவ்வுரிமையை பயன்படுத்தி வடக்கு கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்குவதற்கு அது முயற்சிக்குமானால் அந்த முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவு வழங்குமென்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரத்தின சுட்டிக்காட்டினார்.

எதிர்க் கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜே.வி.பி இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தாலும் ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-10)

## நல்லூர்...

பட்டது.இவருக்கு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே திருமணம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா பிரேத பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு அவர் யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-133)

## "புலிகளின் குரல்" மீதான தாக்குதலுக்கு...

பின் அவர் இதனைத் தெரி வித்தார். அமைதிப் பேச்சுக்கள் நடைபெறும் நிலையில் தமிழ் மக்களின் குரலை ஒடுக்கு வதற்கான தாக்குதல் இது என்றும் இருப்பி னும் புலிக ளின் குரல் வானொலியின் சேவை தொடர்ந்து ஒலிபரப்பா கும் என்றும் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறினார்.அவர் மேலும் கூறியதாவது;

எமது மக்களின் உணர்வுகளைப் பாதித்த ஒரு கொடூரமான தாக்குதல் அரசின் மிக மோசமான கண்மூடித்தனமான தாக்குதலாகத்தான் இது இருக்கின்றது.

எங்களுடைய மக்களுக்கு சிங்களப் படைகள் ஏற்படுத்தும் அழிவுகளை வெளிப்படுத்துகின்ற ஊடகத்தின் கருத்துச் சுதந்திரத்தை இல்லாதொழிக்கின்ற வகையில் அரசு இத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலை விடுதலைப்புலிகளும் தமிழீழ மக்களும் கடுமையாக கண்டிக்கின்றனர். ஒரு பக்கம் சர்வதேச சமூகத்துக்கு அமைதி நடவடிக்கையில் ஆர்வமாகவும் ஈடுபாடு உள்ளவர்களாகவும் காட்டிக்கொண்டு மறுபக்கம் எமது மக்கள் மீதான இனப்படுகொலையை அரசு தீவிரப்படுத்தியிருக்கின்றது.

புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தி அப்பாவிச் சிறார்களை சிறிலங்கா வான்படை கொன்றொழித்தது.

இன்று எமது மக்களுக்கு இருக்கின்ற ஒரேயொரு வானொலியின் நிலையத்தையும் வான்படை தாக்கியழித்துள்ளது. இது ஒரு போர்நிறுத்த மீறல் மட்டுமல்ல–அரசு புரியும் அட்டூழியங்களின் உண்மைகளை வெளிப்படுத்தும் வழியைத் தடுப்பதான கருத்துச் சுதந்திரத்தை அழிப்பதற்கான நடவடிக்கையாகவே இந்த தாக்குதல் உள்ளது என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (ச-5)

## புலிகளின் குரல் பணிமனை...

சேதமடைந்ததாக தெரிவிக் கப்பட்டது.

எனினும் நேற்று மாலை முதல் புலிகளின் குரல்,தமிழீழ வானொலி மற்றும் சிங்கள சேவை என்பன உரிய நேரத்தில் நிகழ்ச்சிகளை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த கிபீர்த் தாக்குதலில் புலிகளின் குரல் ஒலிபரப்பு மையம் மற்றும் அதன் ஒரு கிலோ மீற்றர் சுற்றாடல் பிரதேசம் முற்றாக அழிவுற்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளான புலிகளின் குரல் வானொலி நிலையப் பகுதியை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பார்வையிட்டார்.

இதேவேளை வான்படைக்குண்டுத் தாக்குதலில் அழிவுற்ற புலிகளின் குரல் ஒலிபரப்பு மையத்தை போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் வவுனியாப் பிரதிநிதி பார்வையிட்டுள்ளார்.

இது தொடர்பாகத் தான் தமது தலைமைப் பணிமனைக்கு தெரிவிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பனை சந்தித்து இழப்பு விபரங்களை அவர் கேட்டறிந்தார்.

இத் தாக்குதல் தமிழ் மக்களின் குரல்வளையை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல் என்று கண்காணிப்புக்குழு பிரதிநிதியிடம் நா.தமிழன்பன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தகவல் தெரிவித்துள்ளனர். (எ-5)

## புலமைப் பரிசில் பரீட்சை...

துவதற்கான ஏற்பாடுகளை தாம் மேற்கொண்டு வருவதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத் தினம் தெரிவித்துள்ளார்.

அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து அகதிமுகாம்களிலும் வேறு இடங்களிலும் வசித்துவரும் மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுதவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-133)

## ஹபரணை தாக்குதலுக்கு...

90க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டமைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவிக்கிறது. கொல்லப்பட்டோரின் குடும்பத்தினருக்கு ஆழந்த அனுதாபங்ளை நாம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் தாக்குதலுக்கு எவரும் உரிமை கோராத நிலையிலும் அமெரிக்காவினால் பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியாகும் இது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களது பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் என்று நாமும் சர்வதேச சமூகமும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுக்களை மீளத்தொடங்கி அரசியல் ரீதியாக இருதரப்பினரும் தீர்வுகாண வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# சமாதானப் பேச்சுக்களை நடாத்த...

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் கட்டுநாயக்கா வந்த பௌயரை நோர்வேத் தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

இதேவேளை கடந்த 15 ஆம் திகதி இலங்கை வந்த யப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி; ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ , அரச பேச்சுக்குழுத்தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரைச் சந்தித்து சமாதான முன்னெடுப்புக்கள், அது தொடர்பாக ஏற்பட்டுள்ள தடங்கல்கள் என்பன குறித்து விவாதித்தார்.

இந் நிலையில் இன்று கிளிநொச்சி செல்லும் அவர், அங்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

அதன்போது இலங்கை அரசிடம் இருந்து விசேட செய்திஒன்றையும் கொண்டு செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுக்களை திட்டமிட்டபடி நடாத்துமாறு கேட்பார் எனவும் கூறப்பட்டது. இச் சந்திப்பின்போது அரசுக்கான செய்திகளையும் விடுதலைப்புலிகளிடம் இருந்து அகாசி கொண்டு சென்று மீண்டும் அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் பேசுவார்.

இதேவேளை யசூசி அகாசியின் சந்திப்பினையடுத்து இன்று மாலை அரச பிரதிநிதிகளைச் சந்திக்கும் ஹான்சன் பௌயர், விடுதலைப்புலிகளிடம் இருந்து யப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசியினால் கொண்டு வரப்பட்ட செய்திகள் தொடர்பில் விவாதிக்கவுள்ளார்.

அதன் பின் நாளை கிளிநொச்சிக்குச் செல்லும் பௌயர் அரசினால் மற்றொரு செய்தியினையோ பதிலினையோ கொண்டு செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இரு நாட்டுத் தூதுவர்களும் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாக பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள பிரதிச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர் நாளை 19 ஆம் திகதி இலங்கை வருகைதரவுள்ளார் என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் அரசாங்கத் தரப்பினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடன் ரிச்சர்ட் பௌச்சர் ஆலோசனை நடத்துவுள்ளார்.

ஒக்டோபர் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் அவர் இலங்கையில் இத்தகைய ஆலோசனைகளை நடத்துவார் என்றும் கொழும்பில் உள்ள அமெரிக்கத்தூதரகம் தெரிவித்துள்ளது. (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.